பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road
Jaffna.
T. Phone: 23794

# உதயன்

விலை
ரூபா 3/50

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சுடர்: 5 சுக்கில ஆு மாசி மீ 20 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 06 (04-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 24

# புலிகளுடன் மோத அரசு தயாரில்லை!

## இருதரப்பு பேச்சுவார்த்தைகளின்போது பலமுறை தெளிவுபடுத்தப்பட்டதாகத் தகவல்

— மட்டக்களப்பு செய்தியாளர்: இரா.உதயகுமார் —

மட்டக்களப்பு, மார்ச். 4

விடுதலைப்புலிகளுடன் மோதுவதற்கு இலங்கை அரசு தயாராக இல்லை. இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இதனை பலமுறை தெளிவுபடக் கூறியதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்

அரசாங்கம் — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகளின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம். அவரே இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு: யோகரட்ணம் யோகி, தமிழககாமராஜ்காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ப. நெடுமாறன் ஆகியோரும் உரையாற்றினர்.

கருத்தரங்கின் போதுமாண

(5ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு வரதர் பாராட்டு

திருகோணமலை, மார்ச் 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார் வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாள்.

தாங்களும் விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படவும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

நேற்று திருகோணமலையில் வைத்து உதயன் செய்தியாளருக்கு அவர் அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது:-

ஈழ ஜனநாயகக் குடியரசு தொடர்பான பிரகடனத்தை தான் ஆதரிக்கவில்லை என இந்தியா அறிவித்திருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை அது உடனடியாக ஈழத்தை ஆதரிக்க முடியாது. ஆனால் காலப்போக்கில் இந்தியா ஈழப் பிரகடனத்தை ஆதரிக்கும் என நாம் நம்புகிறோம்.

இந்தியா ஈழத்தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டுக்கூட — 50 ஆயிரம் படைகளை ஈழத்திற்கு அனுப்பியும் கூட — ஈழத் தமிழர்களுக்கு உரிய உரிமைகளை அதனால் பெற்றுத்தர முடியவில்லை

ஐக்கிய இலங்கைக்குள் ஈழத் தமிழர்கள் வாழ முடியாது என்பதை இந்தியா அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பதால் காலப்போக்கில்

(5ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

4. 3. 1990
ஞாயிற்றுக் கிழமை 20
சுப நேரம்:
9.27 முதல் 10.57 வரை
ராகுகாலம்:
04.57முதல் 06.27 வரை
அட்டமிநவமி
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

# ஈழ தேசிய அரசுப்பேரவை மே 5 இல் மீண்டும் கூடும்!

## வரதர் சொல்கிறார்

சென்னை, மார்ச் 3

ஈழஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண சபை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி கூடி தேசிய அரசுப் பேரவையின் தலைவர் மற்றும் அதிகாரிகளைத் தெரிவு செய்யும்.

இத்தகவலை திரு. வரதராஜப் பெருமாள் 'இந்து' நாளிதழுக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஈழதேசிய பேரவையின் மேற்படி கூட்டம் எங்கு நடைபெறும் என்பதை அவர் வெளியிடவில்லை.

'அமைதிப்படை வெளியேறுவதற்கு முன்னர் திருகோணமலையை விட்டு அவர் வெளியேறுவாரா? 'என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்—

'எனது கட்சி சொல்வதையே நான் செய்வேன். கட்சியின் முடிவின்படியே நான் நடப்பேன்'—

கட்சியின் உத்தரவின் மீது நான் எங்கும் செல்லத் தயாராக இருக்கிறேன்.

சர்வதேச பிரசாரம் செய்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இரு அதிபர்கள் இடமாற்றம்?

யாழ்நகரில் இரு பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் இடம் மாற்றம் செய்யப்படவிருப்பதாக கொழும்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய அரசின் கல்வி அமைச்சு இவர்களது இட

(5ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அங்கீகாரம்!

கொழும்பு, மார்ச் 4

புதிதாக இரண்டு அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா அங்கீகாரம் வழங்கி உள்ளார்.

இவற்றுடன் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது.

ஈழம் மக்கள் ஜனநாயகக் கட்சியும், தேசிய தொழிலாளர் யூனியனுமே புதிய கட்சிகளாகும்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு தேர்தல் சின்னமாக வீணை வழங்கப்பட்டுள்ளது. (ஒ எ]

### முச்சந்தி முரளி



என்ன..... டியூன் மாறுகிறாப்போலை கிடக்கு.....!

## திருகோணமலைக் கொள்ளை: ரூ. 2 லட்சமே பறிபோனது! மிகுதிப் பணம் 'தப்பியது'

கொழும்பு, மார்ச் 4

திருகோணமலையில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் இரண்டு லட்சம் ரூபா பணமே கொள்ளை போனது. மிகுதிப் பணம் சுமார் இருபது லட்சம் ரூபா பாதுகாப்பாக வங்கிக்குள் எடுத்துச் செல்லப்பட்டது.

திருகோணமலையில் உள்ள இலங்கை கடற்படை முகாமிலிருந்து திருகோணமலை இலங்கைவங்கி பிரதான கிளைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணமே கொள்ளை முயற்சிக்கு இலக்கானது.

மூன்று பொதிகளில் இருந்த பணமே கொள்ளையினரால் அபகரிக்கப்பட்டது என்றும்—

மிகுதிப் பணம் பாதுகாப்பாக வங்கிக்குள் கொண்டு செல்லப்பட்டு விட்டது என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து முந்திக் கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் நேற்றைய சஞ்சீவியில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

## ஈழப் பிரகடனம் ஒரு 'ஜோக்' விஜேக்கோன் சொல்கிறார்

தமிழீழப் பிரகடனப் ஒரு 'ஜோக்'

மாகாணசபைகள் அமைச்சர் யு. பி. விஜேக்கோன் முன் கண்டவாறு சொன்னார்.

'' அவர்கள் ஒரு கொடியை ஏற்றி, ஓர் அரசைப் பிரகடனம் செய்து விட்டால் போதுமா? நாங்கள் அதனை அங்கீகரிக்க மாட்டோம். உலகமே அதனை அங்கீகரிக்காது''

—இப்படி திரு. விஜேக்கோன் மேலும் சொன்னார். (உ-9)

# தமிழீழப் பிரகடனம் முட்டாள்தனமானது

## வன்மையாகக் கண்டிக்கிறது ரெலோ

கொழும்பு, மார்ச். 4

''ஈழப்பிரகடனம் முட்டாள் தனமானது; இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்; தெட்டத் தெளிவாக நிராகரிக்கிறோம்.''

இப்படி தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ) கொழும்பில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு மகாணசபையை ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக பிரகடனப்படுத்தி நிறைவேற்றப் பட்ட தீர்மானம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே ரெலோ இப்படித் தெரிவித்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஒரு தலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் மக்களின் ஆதரவைப் பெற்று இருக்க வேண்டும்.

அந்தத் தனி நாட்டுக்குரிய பிரதேசத்தின் கட்டுப்பாட்டை தனது செயல் கட்டுப்பாட்டினுள் அந்த இயக்கம் வைத்திருக்க வேண்டும்; பிரதேசத்தைக்காக்கும் வல்லமையும் அதற்கு இருக்க வேண்டும்.

பெருமாள் அரசாங்கத்தின் அதிசயமான, முட்டாள் தனமான இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம்; தெட்டத்தெளிவாக நிராகரிக்கிறோம்.

எப்படியாயினும் தொடர்ந்து இயங்க வேண்டும் என்பதற்காக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் இந்த சாதுரியமற்ற, ஆபத்தான நடவடிக்கையை எடுத்துள்ளது.

— இப்படி அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. (உ-9)

# பலாலி முகாம் இன்று மூடுவிழா!

யாழ்ப்பாணம், மார்ச் 4

பலாலியில் இயங்கி வந்த இந்திய அமைதி காக்கும் படையின் பிரிவு தலைமைக் காரியாலயம் இன்றுடன் மூடப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

பலாலியில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையின் மருத்துவப் பிரிவு, உளவுப் பிரிவு, வாகன திருத்தப் பிரிவு, தொடர்புப் பிரிவு போன்ற பிரிவுகள் உட்பட முகாம்களின் முக்கிய பிரிவுகள் இன்று மூடப்பட்டு, காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்படவிருப்பதாகவும் அறியவருகிறது.

தொடர்ந்து கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்கள் அடுத்த சில தினங்களில் மூடப்படும் என்றும் கூறப்பட்டது.

இவை அனைத்தும் செவ்வாய்க்கிழமையின் முன் பூர்த்தியாக்கப்படும் என்றும் —

எனினும் பிரஸ்தாப பகுதிகளில் பாதுகாப்புக்கு முன்னேற்பாடுகளைக் குழப்பாத விதத்தில் -ஒரு நாளில் விலகக்

(5ஆம் பக்கம் பார்க்க)

## கைதாகி விடுவிக்கப்பட்டோரை மீள சேர்த்துக் கொள்வதா? தளபதிகள் முடிவு செய்வர்

மட்டக்களப்பு, மார்ச் 4

இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டோரை மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதா என்பது குறித்து விடுதலைப் புலிகளின் அந்தந்தப் பிராந்தியத் தளபதிகளே முடிவு செய்வர்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் உயர்வட்டாரங்கள்

(5ஆம் பக்கம் பார்க்க)

# சென்னைப் பேச்சு இனி சாத்தியமில்லை

சென்னை, மார்ச் 4

இலங்கைத் தமிழர் குழுக்களுடனான சமரசப் பேச்சுக்களை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தொடர்ந்து சென்னையில் நடத்துவார் என்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் தென்படவில்லை.

இப்படி 'இந்து' நாளிதழ் தெரிவித்துள்ளது.

பேச்சு வார்த்தைக்கு வரும்படி தமிழர் அமைப்புக்களை கலைஞர் கருணாநிதி கேட்டுக்கொள்ளமாட்டார்என்றே கூறப்படுகிறது.

தீர்வு ஒன்றைத் தமிழர் அமைப்புக்கள் மீது முதலமைச்சர் திணிக்கிறார் என்று தவறாகப் புரிந்து கொள்ளும் நிலை ஏற்படக் கூடாது என்பதில் கலைஞர் கருணாநிதி கவனமாக இருந்து வருகிறார் என்றும் சென்னைச் செய்திகள் தெரிவித்தன. (உ-9)

## புலிகள் - முஸ்லிம் பிரமுகர்கள் காத்தான்குடியில் பேச்சு

காத்தான்குடி முஸ்லிம் பிரமுகர்களுடன் விடுதலைப் புலிகள் நேற்று பேச்சுவார்த்தைகள் நடத்தினர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) தலைமை வகித்தார்.

புலிகளின் சார்பில் திரு. யோகரட்ணம் யோகி, திரு. கருணா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Fridge Washing, Machine 2 In 1 Stereo set அலுமாரி கட்டில்கள், T. V Stand, Show-case மற்றும் மரத்தள பாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குல நாயகம், 143/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம் அல்லது 33, கண்டி வீதி யாழ்ப்பாணம். (11948)

8 Sri Peugeot 304 விற்பனைக்கு உண்டு, தொடர்பு: Dr. Srinivasan, 121, Brown Road, Jaffna, (2806)

சுதுமலை தெற்கு மானிப்பாயில் எச்சாட்டி வைரவர் கோவிலடியில் இணற்றுடன் கூடிய வீடும், 8 பரப்பு காணி சகல பிரயோசனத்துடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க பீற்றர், எச்சாட்டி வைரவர் கோவிலடி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (2664)

1ஸ்ரீ தொடர் இலக்க Ford prefect கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: S. Mariaratnam (Master) No.9, Cathedral Street, Jaffna. (2659]

'35' நீளம் 20' அகலம் செற், 15 பிணைச்சல் 30 கேற் தகரம் 9'-27, 7'-30, 6'-36, 7½ அடி நீளம், 6½ அடி உயரம் 3 கடைக் கதவு, நிலையுடன் 7' நீளம் 3' அகலம் 2 தட்டு கோழிக்கூடு 150புசல் நெல்போடக் கூடிய பெட்டகம், கோழித்தீன் ரின் ஆகியன விற்பனைக்கு உண்டு. சி. கந்தசாமி, நவாலிவடக்கு நாச்சிமார்கோவிலடி மானிப்பாய் (11941)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet Hylie Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11818)

### தேவை

பிரபலமான வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர்களாக கடமையாற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரில் வரவும். 61, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம். (11945)

### பெண் லிகிதர் தேவை

அனுபவம் மிக்க பெண் கணக்கு லிகிதர் மின்தறி நெசவாலைக்கு உடன்தேவை அனுபவச் சான்றுகளுடன் 7-3-90 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் கொடுக்கவும். சிறிராஜ் றெக்ஸ், இன்டஸ்றீஸ், வட்டு கிழக்கு, சித்தங்கேணி. (2802)

### மணமக்கள் தேவையா?

இருபாலாரின் ஜாதகக் குறிப்புகளுடனும், விபரங்களுடனும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். K. K. நாதன், C/o R. சேகர், 5 முஸ்லீம் கல்லூரி, வீதி, யாழ்ப்பாணம் (2804)

### மணமகள் தேவை

யாழ். மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவவேளாள குலத்தைச் சேர்ந்த கீழ்க்கண்டதரமுடையவர்கட்கு I. C. M. A. முடித்த 26 வயதுடையவர்க்கும், 33 வயதுடைய M. Sc. முடித்தவர்க்கும், 36 வயதுடைய M. B. A. முடித்து U. K. யில் கடமையாற்றுபவர்க்கும், B. Sc. படித்த பெண் விரும்பத்தக்கது. விபரங்களுடன் தொடர்பு: 32, சாயி மங்கல, இந்துக்கல்லூரி லேன், யாழ்ப்பாணம். (11942)

### மணமகள் தேவை

கிறிஸ்தவ வேளாள குலத்தைச் சேர்ந்த அழகும், படிப்பும், நற்குணமும் வாய்ந்த ஐரோப்பிய நாடொன்றின் வங்கியில் தொழில் புரியும் 30 வயதான பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர் ஜாதகம் தேவையில்லை. சீதனம் எதிர்பார்க்கப்படும். விளம்பர இல. 105, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11926)

யாழ் இந்து வேளாள 36 வயதுடைய பட்டதாரி எக்கவுண்டராக தொழில் புரியும் மணமகனுக்கு செவ்வாய்க் குற்றமற்ற பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: ABCDE, விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [11947]

### மணமக்கள் தேவை

பல்வகைத் தொழில்களிலும் மணமக்கள், சைவங்கள், மறுதாரங்கள் உண்டு. சாண்டர் மணமகள் தேவை. பகல் 1 மணிவரை சந்திக்கலாம். பன்முகமாற்றகம், ஸ்ரூடியோ, டில்க்கா அருகில் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (11930(

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளலாம், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165. மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

### தவறிவிட்டது

சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் காட்சாலை (190096) இலக்க முடையது. 2-3-90 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வி. க இராசதுரை, கற்பகம், மோட்டோர்ஸ், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ((11944)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### ஆங்கில வகுப்புகள்

O/L ஆங்கிலம் புதிய, பழைய பாடத்திட்டம், Paper Class, ஆரம்பத்திலிருந்து A/L வரை ஆங்கிலம் Spoken Profession A/L English காலை, மாலை துரித பயிற்சி, கனகசபை, No; 8 ஆறாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம். (2691)

## காரைநகரில் மெய்வல்லுநர் போட்டி

காரைநகர் மார்ச்4

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு அதிபர் திரு.செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும்.

இம்முறை விசேஷ போட்டியாக காரைநகரைச் சுற்றி மரதன்ஓட்டப் போட்டியும், அதிவேக சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறும்.

கல்லூரி விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் திரு. க. சதாசிவம் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறார் (இ)

## நூல் கொள்வனவு

சேமமடு மார்ச் 4

வடக்கு.கிழக்கு மாகாண சபை தமிழ் எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்யக் கடந்த வருடம் 1 லட்சத்து 16 ஆயிரம் ரூபாவைச் செலவழித்தது. (இ 37)

## பாத்திரங்கள்

தாளையடி, மார்ச் 4

வடமாரட்சி கிழக்கில் உள்ள வறிய குடும்பங்களுக்கு அலுமினியப் பாத்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் இந்த அலுமினியப் பாத்திரங்களைப் பெற்றன. (இ 147)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் - 1990

இடம்: கல்லூரி மண்டபம்
திகதி: 18 - 03 - 1990
ஞாயிறு பி. ப. 2 – 30 மணி

முக்கிய குறிப்பு:
பிரேரணைகள் அனைத்தும் 15 - 03 - 1990 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

T. R. செல்வரட்னம்
செயலாளர்

பூ. க. இராசரத்தினம்
தலைவர்

(சி/3427)


## அன்றீஸ் அன் கம்பனி லிமிட்டற் நாவற்குழி

ANDRIESZ & CO. LTD., NAVATKULY.

★ பதனிடப்பட்ட கடல் உணவுப் பொருட்களான இறால், நண்டு, கணவாய், மீன் முதலியன
★ சகல Keels [கீல்]ன் உற்பத்திகள்
★ ஐஸ் கிறீம் வகைகள்
★ மாஜரீன்
★ பட்டர்

ஆகியவை தற்போது எம்மிடம் விற்பனைக்கு உண்டு:

[11943]


## முக்கிய அறிவித்தல்

ஹோம் பினான்ஸ் யாழ்கிளை பண வைப்பாளர் சங்கம்

அங்கத்தவர்கள் கவனத்திற்கு:

1. ரூபா பத்தாயிரம் அல்லது அதற்கு குறைந்த வைப்புகளுக்கு முழுப்பணமும் நிவாரணமாகக் கொடுபடும்.
2. முன் விண்ணப்பிக்காத 31 - 12 - 1989 ம் திகதி வரை முதிர்ச்சி அடையும் வைப்புகளுக்கு மாத்திரம் 31 - 03 - 1990 க்கு முன் கீழ்க்குறித்தவருக்கு நிவாரணத்துக்கு விண்ணப்பிக்கவும்.

**Director, Dept of Supervision of Non-Bank Financial Institutions,**
Central Bank of Sri Lanka,
Janadipathi Mawatha, Colombo-1.

3. வேறு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-
N. சிவமுத்துலிங்கம், சங்கத் தலைவர், முதலியாவளவு, சபாபதி வீதி, கொக்குவில்.
A. பாலகிருஷ்ணர், சங்க காரியதரிசி, சேனாதிராயன் கலட்டி, சம்பனை, சுழிபுரம்
C. சோமசுந்தரம், சங்கப் பொருளாளர் 80, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

நா. சிவாமுத்துலிங்கம்,
தலைவர்.

(2709)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சிறிஸ்காந்தாராஜா துரைராசா (பப்பி)

மலர்வு: 29-9-1959
உதிர்வு: 03-02-1990

திரைகடலோடித் திரவியந் தேடப்போன எமது அருமை பப்பியே! பாசத்தின் உறைவிடமே! நேசத்தின் நிறைகுடமே! உன் உழைப்பால் எங்களை ஆதரித்த போஷகனே! நம்மை எல்லாம் ஆற்றவொணாத் துன்பத்தில் ஆழ்த்தினாயே! உன்மரணச் செய்தி கேட்ட அதிர்ச்சியிலிருந்து நாங்கள் மீள முடியாது தவிக்கிறோம். நீங்கள் இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஒரு திங்கள் நிறைவடைகிறது. உங்கள் ஆத்மா இறைவனுடன் ஐக்கியமாகி; பூரண சாந்தியடையும் வண்ணம் இன்று நாம் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் எமது இல்லத்தில் 05 - 03 - 1990 இல் மு. ப. 6-00 மணி தொடங்கி 12-00 மணிவரை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைக்கு வருகை தந்து: அன்னாரது ஆத்ம சாந்திக்காக நமது குடும்பத்தவருடன் இணைந்து பிரார்த்திக்கும் வண்ணம் மிகவும் அன்புடன் அழைக்கிறோம். நன்றி

அன்புடன் பிரார்த்திக்க அழைக்கும்

ஐயா, அக்கா, அத்தான்மார், அண்ணன்மார், மச்சாள்மார், அருமைத்தங்கை, பெறாமக்கள், மருமகள்.

திருவில் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

தனிப்பட்ட அழைப்பெதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்,

தகவல்: செ. முருகையா
காட்டடைப்பு வீதி,
காங்கேசன்துறை.

(2715)

## பாடசாலை அதிபர் சிரமம்

குருநகர் மார்ச் 4

மதிய உணவுக்கான பணம் யாழ்.கல்வித் திணைக்களத்தில் இருந்து உரிய நேரத்தில் வந்துசேராததால்பாடசாலை அதிபர்கள் பலர் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்என்று கூறப்படுகின்றது.

இதனால் சில பாடசாலைகளுக்கு சில வர்த்தக நிறுவனங்களில் பெரும்அளவிலான பணம் நிலுவையாக நிற்பதாகவும் கூறப்படுகிறது. (இ-51)

## விடுதலைப் புலிகளின் தென்மராட்சி கலை, கலாச்சாரக் குழுவும் விடுதலைப் புலிகளின் தென்மராட்சி மாணவர் இயக்கமும் இணைந்து விடுக்கும்

# அன்பான அழைப்பு

கீழ் குறிப்பிடப்படும் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சியான திறமைசாலிகளையும் கழகங்களையும் தேர்ந்தெடுத்து அவர்களை கௌரவிக்கு முகமாக பெறுமதியான பரிசில்களை வழங்கவிருப்பதால் இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் தனிப்பட்ட திறமைசாலிகளோ அல்லது கழகங்களோ சனசமூக நிலையங்களோ எம்முடன் எதிர்வரும் 10 – 03 – 1990 இற்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

01. வண்டிச்சவாரி
02. சைக்கிள் ஓட்டப்போட்டி (ஆண்கள் பெண்கள்)
03. மரதன் ஓட்டம்
04. தாச்சிப் போட்டி (கழகங்கள்)
05. கரப்பந்தாட்டப் போட்டி (செற்ரப், ஓவர்)
06. சறுக்கு மரம் ஏறுதல் போட்டி
07. சித்திரப் போட்டி (வகைகள்-இயற்கைக்காட்சி, காட்டுன், அரசியல் தொடர்பான கேலிச் சித்திரம்)
08. கட்டுரைப்போட்டி
09. கவிதைப் போட்டி
10. பட்டிமன்றம் (கழகங்கள்)
11. கைவேலை, பன்னவேலை
12. தேங்காய் உடைத்தற் போட்டி
13. தலையணைச் சண்டைப் போட்டி

● மாணவர்களுக்கிடையேயும் போட்டிகள் நடைபெறவிருக்கிறது பாடசாலைகளிற்கு கொத்தணி அதிபருக் கூடாக விபரமாக அறிவித்தல் தரப்படும்.

நன்றி

விடுதலைப்புலிகள்
தென்மராட்சி கலை, கலாச்சாரப்பிரிவு
மாணவர் இயக்கம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
(தென்மராட்சிக் காரியாலயம்)
'சேச் லேன்'
சாவகச்சேரி.

அல்லது

தென்மராட்சியிலுள்ள
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
பிரதேசக் காரியாலயங்களுடனோ
தொடர்பு கொள்ளலாம்

குறிப்பு:- பொதுமக்களிற்கென குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி நிகழ்ச்சிகளில் தென்மராட்சிப் பகுதி மக்களிடமும், மாணவர்களிடமும் இருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகிறது.

[சி-3428]

## 2ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 01 - 09 - 1906
மறைவு: 24 - 02 - 1988

திதி: 04 - 03 - 1990

அமரர் ஆறுமுகம் கந்தையா
[ஓய்வு பெற்ற ஆசிரியர்]

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கேசரி வீதி, தையிட்டி,
காங்கேசன்துறை.

[11879]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

**பொருள்:**
இரத்தலின் கொடுமையை நினைந்தால் உள்ளம் கரைந்து உருகும்! உள்ளத்தை ஒளிக்கும் கொடுமையை நினைத்தால், உருகுமளவும் இல்லாமல் அழியும்.


உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
04- 03- 1990 த. பெ. இலக்கம் : 23


# அதிகாரப் பரவலாக்கலும் கல்விக் கோட்டங்களும்

கொத்தணி அதிபர்களுக்கு போதியளவு அதிகாரங்கள் வழங்கப்படாததால் கொத்தணிப் பாடசாலைகளின் திட்டம் அவ்வளவு வெற்றியைக் கொடுக்கவில்லை.

கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு பூ. க. இராசரத்தினம் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

கொத்தணி முறையும், கோட்டக்கல்வி அலுவலகங்களும் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமே அதிகாரப் பரவலாக்கல்தான்

பருத்தித்துறை, மருதனாமடம், பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், வேலணை ஆகிய இடங்களில் தற்போது கோட்டக் கல்வி அலுவலகங்கள் இயங்குகின்றன.

ஆனால் இவற்றுக்குப் போதுமான நிதி இல்லை. ஊழியர்களும் இப்போதுதான் ஓரளவுக்கு நியமனம் பெற்று வருகிறார்கள்.

ஏட்டளவில் அதிகாரங்களைக் கொடுத்து விட்டு அவற்றைச் செயற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் இல்லாமலிருக்கும் போது உருப்படியான நன்மைகளைப் பெறமுடியுமா?

தற்போது கோட்டக்கல்வி அலுவலகங்கள் விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த்தின விழாக்கள், உடற்பயிற்சிப் போட்டிகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. ஆனால் இவற்றுக்கு போதுமான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

அத்துடன் பெரும்பாலான கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு நிரந்தர கட்டட வசதிகள் இல்லை.

அலுவலகங்களை நிறுவ தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் தொடர்பாகவும் சர்ச்சை இருந்து வருகின்றது.

யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலகம் நல்லூரில் இயங்கி வருகின்றது.

ஆனால் அது சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியது.

இப்படியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அலுவலகத்தை இந்தமூன்று இடங்களுக்கும் நடுவில் உள்ள கைதடியில் நிறுவலாம். அல்லது தென்மராட்சிக்கு என்று மற்றொரு கோட்டக் கல்வி அலுவலகத்தைபுதிதாத உருவாக்கலாம்,

யாழ் கல்வித் திணைக்களம் அதிகாரங்களைப் பரவலாக்கி விட்டு இருப்பதில் பிரயோசனம் இல்லை. நிதியும் மற்றும் வசதிகளும் தேவை, அப்படிச் செய்தால் தான் அதிகாரப் பரவலாக்கல்களின் பலன் உண்மையில் கல்வி வளர்ச்சிக்கு உதவும்.

கோட்டக்கல்வி அலுவலகங்களும், கொத்தணிகளும் ஏற்படுத்தப்பட்ட பின்பும் மக்கள் தமது தேவைகளுக்காக கல்வித் திணைக்களத்துக்கே அலைய வேண்டிய நிலமை இன்னும் இருந்து வருகின்றது.

இந்த நிலமை நீங்க வேண்டும்.

அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட பயனை ஆசிரியர்களும், மாணவர்களும், பொது மக்களும் பெறக் கூடிய ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

# சாரணியர் தலைவிகளுக்கான பயிற்சி நிலையம் வேம்படியில்

### 9 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச். 4 யாழ். மாவட்ட சாரணியத் தலைவிகளுக்கான பயிற்சி நிலையம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறமாட்டாது.

வேம்படி மகளிர் கல்லூரியிலேயே இது நடைபெறும்,

சாரணிய மாவட்ட ஆணையாளர் திருமதி தே. அரியரத்தினம் இதனைத் தெரிவித்தார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 9 ஆம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சி நிலையம் நடைபெறும். (இ)

# அமைய தொழிலாளராக சேர்க்கப்பட வாய்ப்பு

மட்டக்களப்பு, மார்ச் 4 பாடசாலை பற்சிகிச்சை நிலையங்கள் மத்திய மருந்தகங்கள் போன்றவற்றில் பகுதி நேர தொழிலாளர்களாகக் கடமையாற்றுவோர் விரைவில் சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்படவிருக்கும் அமைய தொழிலாளர்கள் பதவியில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என தெரியவருகிறது.

சுகாதார அமைச்சு துப்பரவு செய்யும் தொழிலாளர் பதவிக்கு 18-40 வயதுடைய இருபாலாரிடமிருந்தும் தற்பொழுது விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அடிப்படை கல்வித் தகமை 8 ஆம் வகுப்பு சித்தி.

விண்ணப்பதாரர்களின் ஜனசவிய தொழில் வங்கி பகுதி நேர தொழிலாளி சுகாதாரதிணைக்கள தொண்டர் ஆகியோர் முதலிடம் பெறுவார்கள் .

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 9ஆம்திகதி ஆகும்' [இ-21)

# மாநகர சபைக்கு ஒரு திட்டமிட்ட வடிகால் அமைப்பு அவசியமானது

### சூழல் மாசுபடுதல் கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 04 யாழ். மாநகர சபைக்கு ஒரு திட்டமிட்ட வடிகால் அமைப்பு வடிவமைக்கப்பட வேண்டும் கடந்த காலங்களில் வேலிகளே காணிகளின் எல்லைகளாக அமைத்தன. தற்போது மதில் கட்டுவதால் இயற்கையாக ஓடும் தண்ணீர் தடைப்படுகிறது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. விஜயரெத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

சூழல் மாசுபடுதல் சம்பந்தமான ஓர் கருத்தரங்கு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. திலகலால் தலைமையில் அவரது பணிமனையில் நடைபெற்றது.

அத்தருணம், சுகாதார வைத்திய அதிகாரிகள் மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்தமது உரையில் கூறியதாவது.

தேசிய சூழல் பாதுகாப்பு அதிகார சபை ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பல்வேறு விடயங்களில் நடவடிக்கை எடுக்க 1989 இல் புதிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

இக் குழு யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து யாழ் நகரில் புதிய காரியாலயம் ஒன்று அமைத்துள்ளது.

இது சம்பந்தமாக நூல் நிலையம் அமைக்க யாழ் மாநகர சபைக்கு ரூபா 20,000/- வழங்கப்பட்டது. யாழ் சுகாதாரப்பணிப்பாளரும், யாழ் கல்விப் பணிப்பாளம் இக்குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

1. குடிநீரில் ஏற்படும் பிரச்சினைகள்.
2. கல் மண் அகற்றல்.
3. காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை சூழல் பாதிப்பு.
4. மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் அகற்றல்.
5. காடுவெட்டலைத் தடுத்தல்.
6. குப்பை கூழங்களை அகற்றல் ஆகியன முக்கிய பிரச்சினைகளாகும்.

இப்படி அவர் கூறினார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன் தமது உரையில், குடி தண்ணீர் மாசுபடுவதால் குடல் நோய்களான நெருப்புக்காய்ச்சல் செங்கண்மாரி வயிற்றோட்டம் ஆகியன இடம் பெறுகின்றன. அளவுக்கு மிஞ்சிய இராசாயன உரப் பாவனையும் குடி தண்ணிரை மாசுபடுத்துகிறது. யாழ்நகருக்கு பாதுகாப்பான குடி தண்ணீர் வசதி, மாநகரப் பகுதிக்கு கழிவு அகற்றும் ஓர் பாரிய திட்டம் குப்பை கூளங்கள் அகற்றல், இலையான், நுளம்புஇல்லாதொழித்தல்சரியான உணவுப் பரிசோதனை முறைகள் மரங்களை வளர்த்தல் ஆகியன அவசியம் மேற்கொள்ளப்படவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஊர்காவற்றுறைச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. கந்தசாமி தமது உரையில் உப அலுவலங்களில் சுகாதார அபிவிருத்தி வேலைகள் செய்யும் போது சுகாதாரப் பகுதியினரையும் ஒன்றிணைத்து செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கட்டாக்காலி நாய்களை அழிக்கும் முறை பற்றியும் ஆராயப்பட்டது. இதற்காக அரசிடமிருந்து ஓர் வாகனம் ஒன்றையும் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சட்ட பூர்வமற்ற இறைச்சிக்கடைகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை கூடிய விரைவில் எடுக்க விருப்பதாக உதவி ஆணையாளர் தெரிவித்தார். (இ-18)

# சலுகைக் கட்டணத்தில் தொலைபேசி அழைப்புகளை

### பெறக்கூடிய 17 நாடுகள்

கொழும்பு மார்ச் 4 நள்ளிரவு முதல் காலை 6 மணி வரை சர்வதேச நேரடித் தொலைப்பேசிச் சேவையைப் பயன்படுத்துபவர்கள் குறைந்த கட்டணம் செலுத்தும் வசதியை தொலைத்தொடர்புத் திணைக்களம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது

இந்தச் சலுகைக் கட்டணம் ஜனவரி முதல் 14 நாடுகளுக்கு நேரடித் தொலைபேசி அழைப்புக்களைப் பெறுவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் 3 நாடுகளுக்கும் இச் சலுகைக் கட்டண வசதி சென்ற பெப்ரவரி மாதம் முதல் விஸ்தரிக்கப்பட்டது.

சலுகைக் கட்டண வசதியைப் பயன்படுத்தி நேரடித் தொலைபேசிஅமைப்புக்களை பெறக்கூடிய நாடுகளின் முழுப்பட்டியலும்ஒரு நிமிடத்துக்கான கட்டணமும் வருமாறு:

| | |
|---|---|
| ஆஸ்திரேலியா | - 43 ரூபா |
| பங்களாதேஷ் | - 30 ரூபா |
| பஹ்ரைன் | - 57 ரூபா |
| கனடா | - 63 ரூபா |
| எகிப்து | - 57 ரூபா |
| குவைத் | - 57 ரூபா |
| மாலைதீவு | - 30 ரூபா |
| நேபாளம் | - 30 ரூபா |
| பாகிஸ்தான் | - 30 ரூபா |
| இந்தியா | - 30 ரூபா |
| சவுதிஅரேபியா | - 57 ரூபா |
| ஐக்கிய அரபு எமிரேற்சு | - 57 ரூபா |
| பிரிட்டன் | - 57 ரூபா |
| அமெரிக்கா | - 63 ரூபா |
| பிரான்ஸ் | - 57 ரூபா |
| மேற்குஜேர்மனி | - 57 ரூபா |
| இத்தாலி | - 57 ரூபா |

(இ-எ)

# இந்து கலாச்சார மண்டபம் நிறுவுவதற்கு நடவடிக்கை

கொழும்புத்துறை பெப் 4 யாழ் மாவட்டத்தில் வசிக்கும் இந்து மக்களின் பாரம்பரிய கலா சாரத்தேவைகளை ஓரளவாவது பூர்த்தி செய்யும் முகமாக இந்து கலாச்சார மண்டபம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் நல்லை ஆதீன இந்து கலாசார அறநிலையம் ஈடுபட்டுள்ளது.

இந்து கலாசார மண்டபத்தை உருவாக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு யாழ், மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக நல்லை ஆதீன இந்து கலாசார அறநிலையம் பொதுச்செயலாளர் திரு. வே. கெ. தனபாலன் அரசாங்க அதிபருக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

(இ-30)

# இவர்கள் புலிகளிடம் ஒப்படைப்பு

கஞ்சா, வடிசாராயம் விற்பனையில் ஈடுபட்டிருந்த சிலரை குருநகர் போதை வஸ்து ஒழிப்புச்சங்கம் பிடித்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தது.

றெக்கிளமேசன் பகுதியில் ஒரு கிலோ கஞ்சா, இரண்டு பெரல் வடிசாராயம், பழைய பூங்கா வீதியில் 4 பெரல் வடிசாராயம் என்பன திடீர் சோதனையின்போது அகப்பட்டதாக சங்கத் தலைவர் அ. ஸ்ரனிஸ்லோஸ் தெரிவித்தார். (ஒ 51)

# ஹோமியோபதி கருத்தரங்கு

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 41 ஆவது கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 1.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

''ஹோமியோபதி மருந்துகளின் தாய்-சேய் பராமரிப்பு'' என்னும் தலைப்பில் வைத்திய கலாநிதி ம.வேலுப்பிள்ளை கருத்துரை வழங்குவார். (3)

# நட்புறவு ஒப்பந்தம்; பிரேமா முன்னுக்கு நிற்பாராம்

### அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 4 அமைதிப்படை விலகியபின்னர் இந்தியாவுடனான நட்புறவு ஒப்பந்தம்பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்கும் முதல் ஆளாக எமது ஜனாதிபதி இருப்பார்.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

'நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற யோசனையை முதலில் சொன்னது இலங்கைதான். நாம்அதைத் திணிக்கவில்லை' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் கூறியது குறித்து பதிலளிக்கையில் அமைச்சர் விஜேரத்ன முன்கண்ட தகவலை வெளியிட்டார். (ஒ-9)

# நெல்லியடியில் அரண்கள் அகற்றப்படுகின்றன

கரவெட்டி, மார்ச் 4 நெல்லியடிப் பகுதியில் இந்தியப் படையினரால் விட்டுச் செல்லப்பட்ட அரண்கள், முட்கம்பி வேலிகள், மற்றும் வீதித்தடைகளை அகற்றுவதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்குப் பாடசாலைமாணவர்களும் ஏனைய பொதுமக்களும் உதவிவருகின்றனர்.

இதேவேளை நெல்லியடியில் வர்த்தக நிலையங்கள் தற்போது இரவு 7 மணிவரை திறந்திருக்கின்றன. (ஒ-70)

# யாழ் உணவு மருத்துவ பரிசோதகர்

யாழ்ப்பாணம் மார்ச் 4 யாழ் மாவட்ட உணவு மருந்துப்பரிசோதகராக திரு. த. மகாதேவன் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு காங்கேசன் துறைச் சுகாதாரப்பரிசோதகராகக் கடமை யாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ - 18)

# சனிக்கிழமை கடையூட்டு

முல்லைத்தீவு மார்ச்4 முல்லைத்தீவு பட்டின எல்லைக்குள் உள்ள தேநீர்க்கடைகள், மருந்து விற்பனை நிலையங்கள், சிகைஅலங்கார நிலையங்கள் தவிர்ந்த ஏனைய சகல வர்த்தக நிலையங்களும் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மூடப்படும்.

தவறு வோரிடமிருந்து ரூபா 1000/: குற்றப்பணமாக அறவிடப்படுமென முல்லைத்தீவு வர்த்த[illegible] துள்ளது. (இ-92)

அரச நன்கொடை.

# 7 ம் திகதி வரக்கோரிக்கை

பருத்தித்துறை, மார்ச்4 பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட சகல சன சமூக நிலையங்களுக்கும் அரச நன்கொடை வழங்கப்படவுள்ளது. இதுவரை 1987, 1988ம் ஆண்டுக்கான அரச நன்கொடைகளைப் பெறாத சன சமூக நிலையங்களை இம் மாதம் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு தம்மிடமுள்ள பதிவேடுகளுடன் பருத்தித்துறைப் பிரதேச சபைப் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு விசேஷ ஆணையாளர் திரு பெ. கனகசபாபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். இந் நன்கொடை வழங்குவதற்கு யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள் சமுகமளிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ- 118)

# வீதி விளக்குகளை பொருத்த வர்த்தகர்கள் கோரிக்கை

கொடிகாமம் மார்ச் 4 இந்திய இராணுவம் வெளியேறிய பின் நிலைமை சீரடைந்து சகஜநிலைக்குத் திரும்பிய பின் கொடிகாமம் வர்த்தக நிலையங்கள் இரவு 9 மணி வரை வியாபாரம் நடத்துகின்றன. ஆகவே இப் பகுதியில் உள்ள வீதிகளில் மின் விளக்குகள் எரிய விடப்படவேண்டும்.

இவ்வாறு கொடிகாமம் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ- 75)

# அன்னாசிப்பழ வியாபாரிகளை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச். 4 யாழ். பஸ்நிலயப் பகுதியில் உள்ள அன்னாசிப்பழ வியாபாரிகளை உடன் அகற்றுவதற்கு யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை வியாபாரிகளினால் பஸ் நிலையப் பகுதியில் [illegible] துக்களும் ஏற்படுவதாக மாநகர ஆணையாளருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இவர்களை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படஉள்ளதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். [இ-3-10]

## வாசகர் திருமுகம்

### எமக்கு கிடைக்குமா?

புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் மீளக்குடியமர்வு படிக்கு விண்ணப்பித்தோர் பலருக்கு ரூ. 1000/- வழங்கப்பட்டது. அவர்களுக்கு இப்பொழுது இன்னுமோர் ரூ 1000/- வழங்கப்படப்போகிறது.

குறிக்கப்பட்ட சிலருக்கு இன்னும் ரூ 1000/- வழங்கப்படவில்லை. முதல் ரூ 1000/- வழங்கப்படாத காரணத்தால் அடுத்த ரூ 1000/- வழங்கப் படமாட்டாது என அறிகின்றேன். நானும் இச் சிலரில் ஒருவன்.

என்னைப் போன்றவர்களும் இந்த நிவாரணத்தைப் பெற வழி செய்வார்களா?

கோண்டாவில்

**கா. ந. இடைக்காடர்**

### தொண்டர் ஆசிரியரின் அவல நிலை

காங்கேசன்துறை வட்டாரத்திற்கான பயிலுநர் ஆசிரியர் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவானோர் படித்த வறியவர்களும் ஜன சக்தி உணவு முத்திரை உள்ளவர்களும் அல்ல. ஒரு சில உத்தியோகத்தர்களின் பிள்ளைகள்தான் தெரிவாகி இருக்கின்றனர். 5, 6, 7 வருடங்களாக தொண்டர் ஆசிரியர்கள் என பிச்சைப்பணத்திற்கு பாடசாலைக்குப் பாடசாலை அலைந்தார்களே சிலர். இவர்களின் கதி என்ன?

**அளவெட்டி வடக்கு, தெற்கு, மாசியப்பிட்டி, தெல்லிப்பழை தொண்டர் ஆசிரியர்கள்**

### தேர்வில் குழறுபடிகள்

யாழ். மாவட்ட பயிலுநர் ஆசிரியர் தேர்வு ஒரு ஒழுங்கான முறையில் எந்த விதமான ஊழலும் இன்றி நடக்கும் என்று அறிவித்தார்கள். ஆனால் பல குழறுபடிகள் நடந்துள்ளன.

சிலரிடம் தொழில் நுட்ப கல்லூரியில் 100 மணித்தியாலம் படித்தால் 100 புள்ளிகள் என கேட்கப்பட்டது.

ஆனால் புள்ளி போடுபவர்கள் எங்களைப் போன்ற சிலருக்கு புள்ளிகள் போடவில்லை. ஏன் என்று காரணம் கேட்டபோது சரியான காரணம் கூறப்படவில்லை.

அத்துடன் பலர் சான்றிதழ்கள் எல்லாம் போலியாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அதை தகுந்த முறையில் பரிசீலிக்காமல் புள்ளி இடுகிறார்கள்.

க. பொ. த. உயர்தரம் படித்தவர்கள் அனேகமானவர்கள் இதில் நீக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் க. பொ. த. சாதாரணம் படித்தவர்களை தெரிந்தெடுத்துள்ளார்கள். உயர்தரம் படித்தவர்களுக்கு இந்த வேலை கிடைக்காவிடில் எந்த வேலை கிடைக்கும்?

இனிமேலும் இக்குறைபாடுகள் வராமல் இதற்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகின்றோம்.

**பாதிக்கப்பட்டவர்கள்**
யாழ்ப்பாணம்.

## சமய அரங்கினில்

### மனோன்மணி அம்பாள்

பருத்தித்துறை, மார்ச் 4 தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள்எனும்மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் கொடியேற்றம் 28 ஆம் திகதி இடம் பெற்றது.

மாசி மகம் கூடும் தினத்தன்று 10-3-1990 இல் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுறும் என விழா அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-118)

## கண்டதும் கேட்டதும்

கனகராயன் குளத்தில் சில வீடுகளில் இரண்டு ''கேற்'' றுகள் இருக்கின்றன.

ஒரு ''கேற்'' வழமையாக வீட்டிற்குள் வருவதற்குப் பாவிப்பது மற்றது அசம்பாவிதம் ஏதாவது ஏற்பட்டு படையினர் வந்தால் தப்பி ஓடப் பாவிப்பது.

சிலர் இந்த இரண்டாவது கேற்றை ''அதிரடிக் கேற்'' என்று குறிப்பிடுகிறார்களாம்.

வீடுகளில் பலவற்றில் தற்போதும் இரண்டு ''கேற்'' றுகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் படையினர்தான் இல்லையே!

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ சவூதி அரேபியா

## வேலை வாய்ப்பு - SOMC

| | | | |
|---|---|---|---|
| 1. | Civil Engineer | ...B.Sc. | — 1800 SR |
| 2. | Mech Engineer | ...B.Sc. | — 2500 SR |
| 3. | Electric/Electronic Engineer | ...B.Sc. | — 2500 SR |
| 4. | Telephone Technician | ...Dip | — 900 SR |
| 5. | General Electrical Technician | ...Dip | — 900 SR |
| 6. | Electronics Technician | ...Dip | — 900 SR |
| 7. | Auto Electrical Technician | ...Dip | — 800 SR |
| 8. | Pump Mechanic | ...Dip | — 700 SR |
| 9. | General Technician | ...Dip | — 700 SR |
| 10. | Plumper | ...Dip | — 600 SR |
| 11. | Painter | | — 500 SR |
| 12. | Electrician | ...Dip | — 600 SR |
| 13. | Female Cleaners | ...Dip | — 400 SR |
| 14. | Sheet Metal Worker | | — 600 SR |
| 15. | Washer | | — 300 SR |
| 16. | Laundry Press Labourers | | — 700 SR |
| 17. | Laundry Labourer | | — 300 SR |
| 18. | Tailor | | — 600 SR |
| 19. | Labourers | | — 300 SR |

✶ நேர்முகப்பரீட்சை 06-03-1990 கொழும்பில் நடைபெறும்.

**A. தவச்செல்வம்**
B. Sc Hons
நெல்லியான் றோட்,
சுழிபுரம்.

[C-3454]

தென் ஆபிரிக்க அரசு மீதான

# பொருளாதாரத்தடையைதீவிரமாக்க ஆறுகறுப்புஇன நாடுகள்கோரிக்கை

## லுஸாக்கா உச்சி மாநாட்டில் தீர்மானம்

லுஸாக்கா, மார்ச் 3

ஆபிரிக்காவில் உள்ள ஆறு கறுப்பு இன முன்னரங்க நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட ஒரு நாள் உச்சி மாநாடு ஸாம்பியா தலைநகர் லுஸாக்காவில் முடிவடைந்தது.

தென் ஆபிரிக்காவில் உள்ள சிறுபான்மை வெள்ளை இன ஆட்சி மீதான பொருளாதாரத் தடைகள் மேலும் கடுமையாக்கப்படவேண்டும் என்று இம் மாநாட்டில் கலந்து கொண்டு தலைவர்கள்கருத்து வெளியிட்டனர். உச்சி மாநாட்டு முடிவில் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

''தென் ஆபிரிக்கா வெள்ளை இன அரசு மீதான சர்வதேச நிர்ப்பந்தங்கள் தொடர வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்'' என்று கூட்டறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ஸிம்பாப்வே, தான்ஸானியா, பொட்ஸ்வானா' அங்கோலா, மொசம்பிக், ஸாம்பியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்ஸன் மண்டேலா இம்மாநாட்டில் கௌரவிக்கப்பட்டார்.

திரு. மண்டேலா பின்னர் செய்தியாளர் மாநாட்டில் பேசினார்.

''சமரசப் பேச்சுக்களில் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் கலந்து கொள்ள வேண்டும் என்றால் தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசு சில முன் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும்.

எம்மைச்சந்திக்க வெள்ளை இன அரசு தயாராக வருமானால் அவர்களைச் சந்திக்க நாமும்தயார்.

''ஆனால் எம்மைச் சந்திக்க வெள்ளை நிற அரசு இன்னும் தயாராகவில்லை.

''அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டும். அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும். வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் பயமின்றி சுதந்திரமாக நாடு திரும்ப அனுமதிக்கப்பட வேண்டும், இவையே நாம் விதிக்கும் முன் நிபந்தனைகள்.

இப்படி நெல்சன் மண்டேலா சொன்னார். (எ)

## 169 பேர் விடுதலை

காத்மண்டு, மார்ச் 3

ஜனநாயக உரிமைகள் கோரி நடத்தப் பட்ட கிளர்ச்சிகளின் போது கைது செய்யப்பட்டவர்களில் 169 பேரை நேபாள அரசு விடுதலை செய்தது (எ)

## தகவலுக்குச் சன்மானம்

நைரோபி, மார்ச் 3

வெளிநாட்டமைச்சர்றொபர்ட் ஔக்கோவை கடத்திச் சென்று பின்னர் கொலை செய்தவர்கள் விவரம் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பவர்களுக்கு 45ஆயிரத்து250 டாலர் பணம் சன்மானமாக வழங்கப்படும் என்று கென்யா அரச அறிவித்துள்ளது, (எ)

## மகராஷ்டிர மாநிலத்தில் 'மாண்புமிகு' மறைகிறது!

### ஆளுநர் சுப்பிரமணியம் உத்தரவு

பம்பாய், மார்ச். 3

'மாண்புமிகு' என்று என்னை அழைக்காதீர்கள் - இப்படி மகராஷ்டிர ஆளுநராகப் பதவி ஏற்றுள்ள திரு. சி. சுப்பிரமணியம் தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஆளுநர் வாசஸ்தலமான ராஜ்பவன் அதிகாரிகள் இனிமேல் ஆளுநரின் பெயருக்கு முன்னால் 'மாண்புமிகு' என்று கூறமாட்டார்கள்.

வெறும் 'ஐயா' என்று மட்டும் அழைத்தால் போதுமானது என்று திரு. சுப்பிரமணியம் கூறிவிட்டார். சடிதங்கள் கூட தனது பெயருக்கு முன்னால் 'மாண்புமிகு' அடைமொழி பாவிக்கப்படக் கூடாது என்றும் திரு. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார். (எ)

## பிஜி அரசு நிராகரிப்பு

சிட்னி மார்ச் 3

பத்திரிகையாளர்களை பிஜி அரசு அதிகாரிகள் பயமுறுத்துவதாக சர்வதேச பத்திரிகையாளர் சங்கம் வெளியிட்ட அறிக்கையை விஷமத்தனமானது என்று பிஜிர் தகவல் துறை அமைச்சர் ரட்டு குபு கோலோ நிராகரித்தார் (எ)

## தரமுயர்ந்த வாகன உதிரிப் பாகங்களுக்குத் தலை சிறந்த இடம் டக்லஸ் அன்ட் சன்ஸ்

வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தரமுயர்ந்த டயர்கள், பட்டரிகள் மற்றும் பல்வேறு மோட்டோர் வாகன உதிரிப் பாகங்களை நம்பிக்கையுடன் மொத்தமாகக் கொள்வனவு செய்வதற்குத் தலைநகரில் தலைசிறந்த இடம் டக்லஸ் அன்ட் சன்ஸ்.

மோட்டோர் வாகன உரிமையாளர்கள் நம்பிக்கையோடு தேடி வாங்கும் தரச்சிறப்பு வாய்ந்த டயர்கள், பட்டரிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும் நீங்கள் டக்லஸ் அன்ட் சன்ஸில் நியாயமான விலையில் பெறலாம்.

பின்வரும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் டக்லஸ் அன்ட் சன்ஸ் லிமிட்டெட் விநியோகிக்கிறது.

— இன்டரப் மற்றும் ஜி. ரி. சுப்பர் டயர்கள்
— குளோபல் மற்றும் றொக்கட் பட்டரிகள்
— என். ஜி. கே. ஸ்பார்க் பிளக்
— கே. வை. பி. சொக் அப்சோபர்கள்
— மிற்சுபோஷி விசிறிப் பட்டிகள்
— ஈடில்வீஸ் ஹோர்ன்கள்

நம்பிக்கையோடு நாடுங்கள்:

**டக்லஸ் அன்ட் சன்ஸ் லிமிட்டெட்**

221, பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு - 10.

தொலை பேசி: 546895/436668/434937

சாவகச்சேரி
ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம்

## மாசிமக இலட்க்ஷார்ச்சனை விழா

அன்புடையீர்!

சென்ற வியாழக்கிழமை 01 – 03 – 90 ஆம் திகதி முதல் இலட்க்ஷார்ச்சனை ஆரம்பித்து பத்தாம் நாள் 10 – 03 – 90 ஆம் திகதி சனிக்கிழமை மாசிமகத்தன்று பூர்த்தியடையும். காலை, மாலை இருநேரமும் நடைபெறும்.

★ அனைவரும் வருக அன்னை அருள் பெறுக ★

சுபம்

இங்ஙனம்
ப. மஹாகணபதி சர்மா
ஆதீனதர்மகர்த்தா

[11935]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு:
10 - 12 - 1920

உதிர்வு:
02 - 02 - 1990

### திருமதி இராசமணி சோமநாதன்

அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், நிழலாக எம் நினைவோடு உறவாடும் உங்கள் பசுமையான பாசத்தை எண்ணி வாழ்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி பெற புனித அட்டமித் திதி கூடும் நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சகோதரி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

94, சிவன் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (11936)

## கிறிஸ்தவ இறையியல் கல்லூரி

சுன்னாகம்

கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி 'டிப்ளோமா' வகுப்புக்களில் சேர்வதற்கும், செரம்பூர் பல்கலைக்கழக B. Th. வகுப்புகளில் சேர்வதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் G. C. E. (O/L) இல் ஆறு பாடங்கள் சித்தியடைந்தவர்கள் 'டிப்ளோமா' பயிற்சி நெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம். செரம்பூர் பல்கலைக்கழக B. Th. பயிற்சி நெறியைப் பின்பற்ற குறைந்த பட்சம் G. C. E. (A/L) இல் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

மற்றைய விபரங்களும் விண்ணப்பப் பத்திரங்களும் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 31. 03. 1990.

ஏ. கதிர்காமர்.
பதிவாளர்

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
சுன்னாகம். (சி/3938)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## கேள்வி கோரல்

எமது சங்கத்தில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இசுசு லொறி அடிச்சட்டத்திற்கு உடற் கோப்பு (செசி பொடி அடித்தல்) செய்வதற்கானகேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளை 12. 3. 90 ந்திகதிக்கு முன் '' பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை '' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 12. 3. 90 ந்திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ஊர்காவற்றுறை.
2. 3. 90. பொது முகாமையாளர்.
C/ 3461

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு
அமரர்

### திருமதி டில்லிமலர் பரமேஸ்வரன்

[பேபி]

அன்பின் மலர்வு: 06 – 03 – 1954
அழுகைப் பிரிவு: 02 – 02 – 1990

விழி நிறையப் பூத்த மலரேவழி தெரியச் செய்தஉயிரே!
விதி செய்த சதியோ அறியோம் பதியைவிட்டு எங்கு சென்றீர் பேபி!
கனிவு மொழி கூறியெமைக் கட்டியணைத்த அம்மா!
கதையொன்றும் சொல்லாமல் நீர் விரைந்தெங்கு சென்றீர் அம்மா!
கதறி நாம் அழுவதும் முறையோ அம்மா!
காலமெல்லாம் உங்கள் நினைவு அழியாதம்மா!
காவல் துணை என்றும் நீயே அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய கால காலன்
பாதம் பணிந்தோமம்மா!

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், மற்றும் உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அருமைக் கணவன்: ஆ. பரமேஸ்வரன்,
ஆருயிர் பிள்ளைகள்: ரமணன், ராகுலன்.

டச்சு வீதி,
உடுவில், சுன்னாகம். (11895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கு மீண்டும் மாணவர்களைச் சேர்க்க முடிவு

## ஆணைக்குழு விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மார்ச் 4

1989 – 90 பல்கலைக்கழகக் கல்வியாண்டுக்கு மீண்டும் மாணவர்களைச் சேர்க்க பல்கலைக் கழக மான்ய ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

1988 ஆகஸ்டில் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான மிகக் குறைந்த தகைமையைப் பெற்றிருந்தும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் விண்ணப்பிக்கத் தவறியவர்களின் வேண்டுகோளின் மீது இவ் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எப்படியாயினும் காலி இடங்கள் இருந்தால் தான், புதிதாக விண்ணப்பிப்போரின் விண்ணப்பங்கள் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கட்டடக் கலைத்துறைக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

புதிதாக விண்ணப்பிக்க வேண்டியவர்களுக்குரிய தகைமைகள் வருமாறு;

★ 1988 ஆகஸ்ட் ஜி. சீ. ஈ. உயர்தரப்பரீட்சையில் ஒரே தரத்தில் 4 அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் சித்தி எய்தியிருக்க வேண்டும். அல்லது —

★ அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். நான்காவது அங்கீகரிக்கப்பட்ட பாடத்தில் 25 சதவீதத்துக்குக் குறையாத புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும். இவை அனைத்தும் 1988 ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.

★ நான்கு பாடங்களிலும் 180 புள்ளிகளுக்குக் குறையாமல் மொத்த புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும்.

### விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்

★ பதிவு செய்யப்பட்ட மாணவர் அல்லது பல்கலைக் கழகத்தில் ஒருதுறையில் படித்துக் கொண்டிருப்பவர், மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள N.D.T. மாணவர்கள், இதற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப் படமாட்டாது.

ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தும் அதனை ஏற்பதற்குக் கால அவகாசம் கோரியுள்ள மாணவர்களுக்கும் இத்தடை பொருந்தும். இவர்களும் விண்ணப்பிக்கக்கூடாது.

★ 1989-90ஆம் கல்வியாண்டுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள், அவர்களுக்கு அனுமதி கிடைக்காமல் இருப்பினும், அவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பப் பாரங்களை அனுப்பும் கடைசித் திகதி மார்ச் 21 (21-3-1990). விண்ணப்பிப்பதற்குத் தேவையான பாரங்களை மார்ச் 5ஆம் திகதி முதல் மார்ச் 20ஆம் திகதி வரை சிரேஷ்ட உதவிச் செயலாளர் / அனுமதி, பல்கலைக் கழக மான்ய ஆணைக் குழு, இல. 20, வார்ட் பிளேஸ், கொழும்பு-07 — என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

விண்ணப்ப பாரங்களைப் பெற அனுப்பும் கடிதத்தில் பின்வரும் விவரங்கள் அடங்கி இருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் பெயர்:
2. விண்ணப்பதாரரின் விலாசம்:
3. 1988 ஜி. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையில் எடுக்கப் பட்ட பாடங்கள்:
4. விண்ணப்பதாரரின் சுட்டெண்:
5. பெற்ற மொத்தப்புள்ளிகள்:
6. அனுமதி நடைமுறைபற்றிய விவரப் புத்தகம் எந்த மொழியில் இருக்கவேண்டும்.
7. கட்டண வவுச்சரின் திகதி, கொடுக்கும் வங்கி:
8. விண்ணப்பதாரரின் கையொப்பம்:

விண்ணப்ப பாரம் பெற 35 ரூபா கட்டணம் செலுத்தப்பட வேண்டும். (ஒ-எ)


## மாதிரி வினாத்தாளும் கருத்தரங்கும்

## O/L - MARCH 90

O/L, A/L பரீட்சைகளுக்கு முன்னதாக வருடா வருடம் எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் கல்விக்கருத்தரங்கு, மாதிரிவினாத்தாள் விளக்கங்கள் இம்முறையும் வழமைபோலவே நடைபெறவுள்ளது.

இலவசமாக நடாத்தப்படும் இக்கருத்தரங்கில் எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களும் பங்குபற்றலாம்.

சகல பாடங்களுக்குமான பகுதி - I ற்கான பரீட்சையும். பகுதி I, II ற்கான வினாத்தாள் விளக்கங்களும்

12 - 03 - 1990 இலிருந்து நடைபெறும்.

நேரம்:- 3.00 — 5.30 p.m.

★ பரீட்சைக்கான புள்ளிகள் கருத்தரங்கிற்கு முன் அறிவிக்கப்படும்.

★ 05 - 03 - 1990 ற்கு முன் எமது நிறுவன அலுவலகத்தில் பதிவு செய்து இதற்கான அனுமதி அட்டையைப் பெற்று இட நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளவும்.

BOND INSTITUTES
58, A Stanley Road, Jaffna.
[2714]





## மீள சேர்த்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை நேற்றுத் தெரிவித்தன.

விடுவிக்கப்பட்டோர் எந்தச் சூழ்நிலையில் கைதானார்கள், கைதாகி இந்தியப் படை முகாமில் இருந்தபோது அவர்கள் நடந்துகொண்ட விதம், கைதானோரின் குடும்ப உறுப்பினர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய பங்கு ஆகியவை குறித்து பிராந்திய தளபதிகள் ஆராய்ந்த பின்னர் அவர்களை மீண்டும் இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதா என்பது குறித்து முடிவு செய்வார்கள் என்று சொல்லப்பட்டது.

கைதாகி படையினரிடம் இருந்த வேளையில் ஆயுதங்கள் முதலியவற்றைக் காட்டிக் கொடுத்தவர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சேர்த்துக் கொள்ளப் படமாட்டார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

## புலிகளுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தை ஆதரிக்கும் கட்டாய நிலை இந்தியாவுக்கு ஏற்படும்.

தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாத வரை ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதை நான் முற்றிலும் வரவேற்கிறேன். இந்த விடயத்தில் எங்கள் நிலையும் இதுதான்!

வடக்கு, கிழக்கில் இராணுவத்தை முகாம்களுக்கு வெளியே நடமாட முடியாத வகையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். இந்த நடவடிக்கைகளை அவர்கள் முழு அளவில் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பம்.

அதேவேளை எல்லாத் தமிழர்களும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்ற உணர்வு விடுதலைப் புலிகளுக்கு வரவேண்டும். அதன் மூலம் தான் தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதை உறுதி செய்ய முடியும்.

சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களைப் பிளவுபடுத்தி ஆண்டது போதும். இனிமேலும் நாம் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. ஆகவே இணைந்து செயற்படுவோம்.

விடுதலைப் புலிகளுக்கும் எங்களுக்கும் எந்த விதத்தில் கருத்து வேறுபாடு உருவானது?

நாங்கள் மாகாணசபையை ஏற்றுக்கொண்டது தான் அவர்களுக்கு எம்மீது ஆத்திரத்தை உருவாக்கியது.

உண்மையில் நாம் மாகாண சபையை ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை அரசாங்கம் தரும் மாகாணசபை மூலம் தீர்வு காண முடியாது; மாகாண சபை தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றப் போதுமானது அல்ல என்பதை உலகுக்கு நிரூபிக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருந்தது.

அதன் அடிப்படையில் மாகாண சபையை ஏற்றுக்கொண்டு கடந்த ஒரு வருட காலமாக அதிகாரப் பரவலாக்கத்திற்காக ஸ்ரீ லங்கா அரசுடன் போராடி, எதை நிரூபிக்க வேண்டுமோ அதனை நிரூபித்திருக்கிறோம்.

ஆகவே விடுதலைப் புலிகளும் எம்மைப்போல் ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்ந்து பேசி, நாம் செய்ததை மீண்டும் செய்து, அதனைத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. இந்த வழி காலத்தைத்தான் இழுத்தடிக்கும்.

ஆகவே எல்லோரும் ஒரே நோக்கிலும், ஒரே குறிக்கோளுடனும் ஈழப் போராட்டத்தில் குதித்தால் தமிழர்கள் வெகுவிரைவில் அதனைப் பெற முடியும் — என்றார்.

★ யாழ் மாநகர சபைக்கு

# மின் விநியோகத்தில் லாபம்; ஆனால் பழைய நிலுவையை கட்ட முடியாது

யாழ்ப்பாணம், மார்ச்.4

''யாழ். மாநகரசபை மின்சாரப் பகுதி மீண்டும் இலாபத்தில் இயங்கி வருகின்ற போதும் 83ஆம் ஆண்டு முதல் சட்ட விரோத மின் பாவனையால் ஏற்பட்ட 2 கோடி 90 இலட்சம் ரூபா நஷ்டத்தால் எந்த அபிவிருத்தியும் செய்யமுடியாது உள்ளது''

மாநகர சபையின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது;

''83 ஆம் ஆண்டுக்குப்பின் மாநகரசபை தற்போதுதான் மின் விநியோகத்தில் இலாபத்துடன் இயங்குகிறது. ஆனால் 83ஆம் ஆண்டில் இருந்து சட்டவிரோத மின் பாவனை அதிகரித்தது. அதனால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு இன்று முகம்கொடுக்க வேண்டியுள்ளதால் எந்த அபிவிருத்தி வேலையும் மேற்கொள்ள முடியாதுள்ளது.

மாநகரசபை தற்போது மின்சார சபைக்கு 4 கோடி 60 இலட்சம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. அதில் ஒரு கோடி 70 லட்சம் ரூபா பாவனையாளர்களிடம் இருந்து அறவிடமுடியும். மீதியான 2 கோடி 90 இலட்சம் ரூபாவும் எவரிடமும் அறவிட முடியாதுள்ளது.

இதனால் மேலும் உப-மின் நிலையங்களை அமைத்து மின்விநியோகத்தை சீர் செய்ய முடியாதுள்ளது.

இந் நிலையில் மக்கள் தம் நிலுவைகளைச் செலுத்தி உதவவேண்டும். மீதியை ஏதாவது நிறுவனத்திடம் இருந்து உதவியாகவோ அல்லது கடனாகவோ பெற்றுத் தான் கடனைச் செலுத்த வேண்டும்.

—இப்படி அந்த அதிகாரி கூறினார், (உ-3)

## புலிகளுடன் மோத....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் பதிலளித்தனர்.

டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக சிங்கள மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க விரும்புகிறோம். அதற்காகவே ஸ்ரீலங்கா அரசுடன் பேசுகிறோம்.

தமிழர்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அபிலாசைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். இல்லையேல் எமது போராட்டம் தொடரும்.

இது சிங்களத் தலைவர்களுக்கும் தெரியும்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் ஒப்பந்தத்திற்குப்பின்னர் வந்தது அல்ல.

1983க்குப்பின் எமது தலைமைப்பீடத்துக்கும் புதுடில்லிக்கும் இடையில் முரண்பாடு காணப்பட்டது. விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் இலட்சியமான ஈழக் கொள்கையில் உறுதியாக இருந்ததுதான் இந்தமோதல் நிலை உருவானதற்குக் காரணம்.

இந்தியாவோ தமிழ்போராளிகளைத் தமது பகடைக்காய்களாகப் பாவிக்க விரும்பியது.

இந்தியா — விடுதலைப்புலிகள் மோதலை நாம் விரும்பவில்லை. யுத்தம் தொடங்கியகாலத்தில் புதுடில்லிக்குப் பல கடிதங்களை அடுத்தடுத்து அனுப்பினோம்.

யுத்தம் அநீதியானது; எம் மீது வேண்டுமென்றே ஏவிவிடப்பட்டது என்பதைப் புதுடில்லிக்குத் தெளிவுபடுத்தினோம்.

'இந்திய ஜவான்களை நாம் கொல்லவிரும்பவில்லை. நாம் இந்திய மக்களை நேசிக்கிறோம். யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை தேவை' என நாம் பலதடவை அறிவித்தோம்.

ஆனால் எமது அறிவிப்பை 'விடுதலைப்புலிகள் பலவீனம் அடைந்துவிட்டார்கள்; பயந்துவிட்டார்கள்' என இந்தியா கருதி தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது.

அதனால் என்ன நடந்தது என்பதுஎமதுமக்களுக்கு நன்கு தெரியும்.

எம்மை நசிக்க அந்நிய சக்தி முயன்றது; எம்மை அழிக்க எமது வரலாற்று எதிரியான ஸ்ரீலங்கா முயன்றது; ஐந்து துரோகக் கும்பல்கள் எங்களை ஒழிக்கக் கங்கணங்கட்டின. இத்தகைய நெருக்கடியான நிலையில் தான் நாம் யுத்தகளத்தில் இருந்தோம்.

இலங்கை அரசுடனான பேச்சு நாம் விரும்பிச் சென்றதல்ல. ஜனாதிபதி அழைத்தார். ஏற்றுக் கலந்து கொண்டோம்.

ஒரு தேசிய விடுதலை அமைப்பு பல பிரமாணங்களிலும் பல வடிவங்களிலும் தன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் இராஜதந்திர ரீதியாக பலவழிமுறைகளைக் கையாண்டு எமது மக்களுக்கு எவ்வகையிலாவது சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டோம்

சர்வதேச அமைப்புக்கள் கூட பேச்சுவார்த்தை மூலம் நலன் அடைய முடியும் என்றால் ஆயுதப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டுப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது வழக்கம்.

இந்தப் பின்னணியில்தான் பேச்சுவார்த்தைக்கு நாம் சென்றிருக்கிறோம்.

இப்பேச்சுக்கள்மூலம் நிரந்தரச் சமாதானம் வருமா? பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமா என்றெல்லாம் பரவலாகக் கேள்வி எழுப்பப்படுகிறது.

கடந்தகால தமிழ்த் தலைமைத்துவம்போல் சப்பாணிப் போராட்டம், காந்தியத் தத்துவம் ஆகியவற்றை நம்பி வெறுங்கையுடன் போய் சிங்களவர்களை நம்பி ஏமாறும் பேர்வழிகள் அல்ல நாங்கள்.

பலம்பொருந்திய ஆயுத சக்தியாக இருந்துகொண்டே அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்கிறோம்,

எம்மை யாராவது ஏமாற்றினால், ஏமாற்ற முயன்றால் அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றியவர்களாவார்கள்.

ஸ்ரீலங்கா அரசு-விடுதலைப் புலிகள் மோதல் ஏற்படுமா என்ற அச்சம் நிலவுகிறது.

விடுதலைப்புலிகளுடன் மோத தாங்கள் தயாராயில்லை என ஸ்ரீலங்கா அரசு படைகள் பல தடவைகள் பேச்சுவார்த்தையின்போது கூறியுள்ளது.

தென்னிலங்கைப் பிரச்சினை, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை, அமைதி சீர்குலைவு இத்தகைய பிரச்சினைகளை வைத்துக் கொண்டு வடக்கு, கிழக்கில் புலிகளுடன் மோத அரசு தயாரில்லை.

விடுதலைப் புலிகள் சாதாரண ஆயுதக்குழு அல்ல, பயங்கரவாதக் குழுவும்அல்ல. தேர்ச்சிபெற்ற அனுபவம் பெற்ற சர்வதேச ரீதியில் பலம் பொருந்திய அமைப்பு. உலகின் 4 ஆவது வல்லரசின் இராணுவத்தை விரட்டி அடித்த அமைப்பு. ஆகவே எம்முடன் மோதுவது இலகுவானதல்ல.

இன்று நாம் முன்னரைவிட பத்துமடங்கு ஆயுதம் ஆட்பலம், ஆன்மீக பலம் ஆகியவற்றுடன் விளங்குகின்றோம்— என்றார்.

## ஈழ தேசிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும்படி கட்சி என்னைக் கேட்டுக் கொண்டால் நான் உலக நாடுகளுக்கு விஜயம் செய்வேன்.

அல்லது ஆயுதக்குழுவுக்கு தலைமை தாங்கும்படி கட்சி கட்டளையிட்டால் அதன்படியும் நான் செயல்படுவேன்— என்றார் திரு. வரதராஜப் பெருமாள்

## பலாலி முகாம் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடிய அளவான படையினர்— காவல் அரண்களில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருப்பர் என்றும் —

காங்கேசனில்உள்ள ஜவான்களில் பெரும் பகுதியினர் கப்பலில் ஏறிய பின், வியாழக்கிழமையன்று ஒரே நாளில் அனைத்து படையினரும் வாபஸாகி காங்கேசன் துறைக்கு முன்னேறுவர் என்றும் —

அங்கிருந்து ஒரேநாளில் அனைவரும் கப்பலில் நாடு திரும்புவர் என்று அறியவருகிறது. [உ-9]

## நாவல் வெளியீடு

யாழ்ப்பாணம் மார்ச்-3

யாழ்-பல்கலைக்கழக கலை வட்டத்தின் ஆதரவில் நந்தியின் ''நம்பிக்கைகள்'' நாவல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவிருக்கிறது.

பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

திருமதி. சித்திரலேகாமௌனகுரு, கலாநிதி நா. சுப்பிரமணியம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்

## முல்லைத்தீவில் சிற்றூர் அவை

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ''சிற்றூர் அவை'' என்னும் கிராம அவை தெரிவுக் கூட்டங்கள் முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிற்றூர் அவையில் 18 வயதுக்கு மேற்பட்ட இரு பாலாரும் அங்கத்துவம் வகிப்பர் (இ-113)

## இரு அதிபர்கள்..,

மாற்றத்துக்கு அனுமதியளித்திருப்பதாகவும் —

அதனையடுத்து மாகாண கல்வி அமைச்சு இடம்மாற்ற உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இடம் மாற்றம் தொடர்பான உத்தரவுக் கடிதம் தபாலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அது நாளை யாழ். கல்வித் திணைக்களத்துக்குப் போய்ச் சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.


## ★ பிறந்தநாள் வாழ்த்து ★



செல்வி
ஜீ. ராகினி
(03 - 03 - 1990)



செல்வி
ஜீ. யாழினி
(04 - 03 - 1990)

வேலணை பெருங்குளம் அம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்வி ராகினி தனது 10 ஆவது பிறந்த நாளை (03 – 03 – 1990) சனிக்கிழமையும், செல்வி யாழினி தனது 9 ஆவது பிறந்தநாளை இன்றும் (ஞாயிறு) வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்கள். இவர்களை அம்மா, தாத்தா, சித்தி, சித்தப்பா, தங்கைமார், அம்மம்மா, மாமாமார், மாமிமார், வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மனின் அருள்பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

[2718]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!

**P. I. பர்னாண்டோ**
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.



# உதயன்

04 - 03 - 1990 ஞாயிற்றுக்கிழமை



பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: **P. I. பர்னாண்டோ**
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.


# திருகோணமலையில் நிதானமாக நடக்க படைக்குப் பணிப்பு!

திருகோணமலை, மார்ச் 4

**ஆகக்கூடுதலான நிதானத்தை கடைப்பிடிக்கும்படி திருகோணமலையில் உள்ள இலங்கை ஆயுதப்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.**

**திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த முப்படைகளினதும் தளபதிகள் படையினருடன் பேச்சுக்களை நடத்தினர். அப்போது வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்தின இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.**

வடக்கு, கிழக்கு மாகாண சபை, ஈழ ஜனநாயக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக தன்னைத் தானே பிரகடனப்படுத்தியிருப்பதை அடுத்து திருகோணமலையில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

அதனாலும் -

நிலைமையை மோசமடையச் செய்யும் நோக்குடன், ஸ்ரீலங்காப் படையினரை ஆத்திரமூட்டி பதில் தாக்குதலை நடத்தத் தூண்டும் வகையில் சில சக்திகள் செயற்படக்கூடும் என உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகப்படுவதினாலுமே -

மேற்படி உத்தரவு படையினருக்கு விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

திருகோணமலையில் உள்ள புதிய தலைமையகத்தில் கிழக்கு மாகாணப் பாதுகாப்பு அதிகாரிகளின் மாநாடு ஒன்றும் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (உ-எ)

## சண்டை விமானங்களை தயாரிக்க பாக். திட்டம்

இஸ்லாமபாத், மார்ச் 3

சண்டை விமானங்களை தயாரிக்கும் திட்டம் ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

விமானப்படையின் பலத்தைக் கூட்டவே இந்த நடவடிக்கையை எடுக்க பாகிஸ்தான் அரசு தீர்மானித்திருப்பதாக 'டோன்' ஆங்கிலத் தினசரி செய்தி வெளியிட்டிருக்கிறது.

உத்தேச தொழிற்சாலை கம்ரா என்னும் இடத்தில் நிறுவப்படும். (எ)

### ஜெயலலிதா விபத்துச் சம்பவம் :

# தமிழகம் முழுவதும் கண்டனக் கூட்டங்களாம்!

சென்னை, மார்ச் 4

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா பயணம் செய்த கார் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக தி. மு. கவையும் தி.மு.க. அரசையும் கண்டித்து தமிழகம் முழுவதும் இந்த மாதம் 8ஆம் திகதி முதல் 5ஆம் திகதிவரை கண்டனக் கூட்டங்களை நடத்துவதுஎன்றும் அ. தி. மு. க. — இந்திர காங்கிரஸ் கூட்டணி முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

இப்பிரச்சினை சம்பந்தமாக என்ன மேல்நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவுசெய்ய கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் இம் மாதம் 17ஆம் திகதி மீண்டும் கூடும் என்று திரு. இராமமூர்த்தி தெரிவித்தார். (உ-9)

### ஜெயலலிதாவிடம் விசாரணை!

சென்னை, மார்ச் 4

கார்-லொறி விபத்துச் சம்பந்தமாக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா, சசிகலா நடராஜன் ஆகியோரிடம் கடந்த வெள்ளிக்கிழமை பொலீஸார் விசாரணை நடத்தினர்.

மயிலாப்பூரில் உள்ள மருத்துவமனைக்குச் சென்றபொலீஸார் ஒரே அறையில் வைத்து இருவரையும் விசாரித்தனர்.

அரைமணிநேரம் நடந்த இவ்விசாரணையின் போது சசிகலாவின் கணவர் நடராசனும் உடனிருந்தார். (உ-9)


சாவகச்சேரி
துர்க்கை அம்பாள் தேவஸ்தானம்
அடியார்களுக்கு

### முக்கிய அறிவித்தல்

மேற்படி தேவஸ்தானத்தில் சகல விஷேட உற்சவமும் நித்திய பூஜையும் தொடர்ந்து கிரமமாக நடைபெற்று வருகிறது என்பதை அறியத்தருகிறேன்.

மேற்படி ஆலயத்தின் வளர்ச்சியை குன்றச் செய்தவற்காக ஒரு சில விஷமிகள் தேவை இல்லாத வதந்தியை பரப்பி வருகிறார்கள் என்பதை கவலையுடன் அறியத்தருகிறேன்.

இங்ஙனம்,
**ப. மகாகணபதி சர்மா**
ஆலயதர்மகர்த்தா

(11934)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 4- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


### விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 4

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட அல்லது புலிகளிடம் சரணடைந்த சுமார் 75 பேர் நேற்று மாலை யாழ் நாச்சிமார் கோயிலடியில் வைத்து விடுவிக்கப்பட்டனர். (உ-9)

### கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ் விக்டோரியா வீதியிலுள்ள கலாலயா நிறுவனத்தில் கேக், ஐசிங், பூவேலை, கைவேலை, வர்ணம் தீட்டுதல் சமையற்கலையுடன்கூடிய மனைப்பொருளியல் கண்காட்சி ஒன்று நடைபெற்று வருகிறது.

இக் கண்காட்சியின் இறுதித் தினம் இன்றாகும். (இ)

### பாலைதீவில் மழை!

குருநகர், மார்ச், 4

பாலைதீவில் நேற்று அதிகாலை பலத்த மழை பெய்ததாக அங்கிருந்து வந்தவர்கள் மூலம் தெரியவந்தது. சுமார் ஏழாயிரம் பக்தர்கள் வரை அங்கே குழுமியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் ஆயரின் அறிவிப்பை அடுத்து திருநாள் திருப்பலி ஆராதனைகள் நடத்தப்படாத போதிலும் பக்தர்கள் ஆலயத்தில் மெழுகு திரிகள் ஏற்றி வழிபட்டனர். (ஒ-51)

### வாகன வரி அனுமதி பத்திரம்

கொழும்புத்துறை மார்ச் 4

கடந்த வெள்ளிக்கிழமை வரை 338 வாகன உரிமையாளர்கள் யாழ். செயலகத்தில் வாகனவரி அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளனர். (இ 30)

## காங்கிரஸ்காரர் தகராறு; செயலாளர் குத்திக் கொலை!

சென்னை, மார்ச் 4

தென் சென்னை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. திலிப்குமார் கொல்லப்பட்டார்.

இது சம்பந்தமாக தென் சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர் திரு. கத்திப்பாரா ஜனார்த்தனம் கைது செய்யப்பட்டார். இவருடன் சேர்த்து துரைக்கண்ணன் என்கிற காங்கிரஸ் உறுப்பினரும் கைது செய்யப்பட்டார்.

மேலும் அறுவரை பொலீஸார் தேடிவருகின்றனர்.

நேற்று முன்தினம் மயிலாப்பூரில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டம் தொடர்பான சுவரொட்டியில் தனது பெயர் இடம்பெறவில்லை என்று திலிப் குமார் தகராறு செய்தாராம்.

பின்னர் காரில் திரும்பி வருகையில் அவர் மயிலை, தெப்பக்குளம் அருகே இனந்தெரியாதோரால் வழி மறிக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டார். அந்த இடத்திலேயே திலிப்குமார் மரணமானார் என்று சொல்லப்பட்டது. [ஒ-எ]

## கிறீஸுக்கும் இத்தாலிக்கும் 54 ஆசியர்கள் அலைக்கழிவு!

### அவர்களில் சிலர் இலங்கையராம்

ஏதென்ஸ், மார்ச் 4

''இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட சில இலங்கைப் பிரசைகள் உட்பட 54 ஆசியர்களை, கிறீஸ் நாடு ஏற்க மறுத்தது. அதனை ஆட்சேபித்து அவர்கள் அனைவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். இதனைத்தொடர்ந்து அவர்களை ஏற்றுக்கொள்ள கிறீஸ் இணங்கியது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த 48 ஆண்களும் 6 பெண்களும் கிறீஸ் ஊடாக இத்தாலிக்குள் நுழைய முயன்றபோது தடுக்கப்பட்டனர்.

இத்தாலி துறைமுக நகரான பாரியில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இவர்கள் பாரிதுறைமுகத்தை சென்றடைந்தனர்.

கிறீஸில் ஆளுக்கு 2 ஆயிரம் டாலர் தாங்கள்கொடுத்ததாகவும்தொழில்பெர்மிட்வாங்கித் தருவதாக அங்கு தங்களுக்கு உறுதி கூறப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இத்தாலிய அதிகாரிகள் இவர்களை கப்பல் மூலம் கிறீஸ்துறைமுக நகரான பட்ராஸுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் கிறீஸ் அதிகாரிகள் அவர்களை இத்தாலிக்கே மீண்டும் திருப்பி அனுப்பினர்.

இதனைத்தொடர்ந்து இத்தாலியில் 54 பேரும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களை மீண்டும் கிறீஸுக்கு ஏற்றிச் செல்ல கப்பல் கப்டன்மறுத்து விட்டார்.

54 பேரில் 3 பேர் பாரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அந்த 54 பேரையும் பொறுப்பு ஏற்பதாக கிறீஸ் அறிவித்திருக்கிறது. (உ-எ)

## தமிழ் ஈழப் பிரகடனத்தை முஸ்லிம் காங். ஆதரிக்காது

வடக்கு, கிழக்கு மாகாண சபையை ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக பிரகடனப்படுத்தியதை முஸ்லிம் காங்கிரஸும் ஆதரிக்கவில்லை.

இவ்வாறு புதிய பிரகடனம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கருத்து வெளியிட்டார்.

நாடு பிளவுபடுவதை முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் ஆதரிக்காது. ஒற்றையாட்சி முறையையே நாம் ஆதரிக்கிறோம்.

தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்தி தீர்வுகாணகாலம் பிந்தவில்லை என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

★ யாழ் நகரப்பகுதியில்

# கண்ட இடங்களில் குப்பைகளை போடுவது தடை செய்யப்படும்!

## புதிய திட்டம் குறித்து ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

யாழ். நகர் பகுதியில் பொது மக்கள் கழிவுப் பொருள்கள், கடதாசிகள் ஆகியவற்றை கண்ட இடங்களில் வீசுவது தடைசெய்யப்பட இருக்கிறது. இவற்றைப் போட விசேட தொட்டிகள் நகர் எங்கும் வைக்கப்படும்,

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். நகரப் பகுதியை சுத்தமாக வைத்திருப்பது சம்பந்தமாக நேற்று மாநகரசபையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது,

இக் கூட்டத்தில் மாநகர சபை சுகாதார அதிகாரிகள், யாழ். றோட்டறிக் கழகச் செயலாளர் திரு. உருத்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தை அடுத்து ஆணையாளர் இந்த ஏற்பாடுகள் குறித்து உதயனுக்கு விளக்கமளித்தபோது கூறியதாவது:-

★ நகரை சுத்தமாக வைத்திருக்க பரீட்சார்த்தமாக இரு பகுதிகளைத் தெரிவு செய்துள்ளோம்.

★ நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து கோவில் வீதி, கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, பலாலி சந்தி, கந்தர்மடம் சந்தி, அரசடி வீதி வழியாக கோவில் வீதியில் முடிவடையும். இந்தஇடத்துக்குட்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்கள் குப்பைகளைத் தகரங்களில் போட்டு வைத்திருக்க வேண்டும். நேர அட்டவணைப்படி மாநகர ஊழியர்கள் வந்து குப்பைகளை எடுத்துச் செல்வார்கள். வீதிகளில் குப்பைகள் போடுவது தடைசெய்யப்படும்.

★ வேம்படி சந்தியிலிருந்து ஆரம்பித்து சத்திரத்துச் சந்தி, முட்டாஸ் கடைச் சந்தி, ஆரியகுளம் சந்தி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நகர் பகுதியில் உள்ள கடைக்காரர்கள் தம் கழிவுப் பொருள்களைப் பிரத்தியேகமாக வைக்கப்படும் குப்பைத் தொட்டிகளில் போடவேண்டும். தினமும் குப்பை அகற்றும் வேலைகள் நடைபெறும்.

★ பொதுமக்கள் கழிவுக் காகிதாதிகளையும், சிகரட் அடிக்கட்டைகளையும், மற்றும் கழிவுப்பொருள்களையும் மின்கம்பங்களில் பொருத்தப்படும் குப்பைத்தொட்டிகளில் போடவேண்டும். வீதிகளில் போடக்கூடாது.

இத் திட்டத்துக்கு தேவையான தகரங்களை றோட்டறிக் கழகமும், மில்க்வைற் நிறுவனமும் வழங்க முன்வந்துள்ளன. (ஒ-3)

## வீதியில் கிடக்கும் சடலங்களுக்கு இனி பொலீஸாரே பொறுப்பு!

கொழும்பு, மார்ச் 4

வீதி ஓரங்களில் எரிந்த நிலையிலும் அடையாளங் காணப்படாமலும் கண்டுபிடிக்கப்படும் மனித சடலங்களுக்கு அந்தந்தப் பகுதி பொலீஸாரும் இணைப்பு அதிகாரிகளுமே பொறுப்பு என்று ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

சகல பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இணைப்பு அதிகாரிகளுக்கும் இந்த உத்தரவை அனுப்பி வைக்கும்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா பொலீஸ் மா அதிபரையும் இராணுவத் தளபதியையும் பணித்திருக்கிறார்.

வேறு இடங்களில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே வீதியில் கிடக்கின்றன என்ற காரணங்களை பொலீஸார் இனியும் சொல்ல முடியாது என்றும் அமைச்சர் விஜேரத்னா அறிவித்திருக்கிறார்.

### ஷாமொறா வேண்டுகோள்

மனாகுவா, மார்ச் 3

ஆயுதங்களை கைவிடும்படி கொன்றாக் கிளர்ச்சியாளர்களுக்கு நிக்கரகுவாவின்புதிய ஜனாதிபதி திருமதி ஷாமொறா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

திருமதி ஷாமொறா வரும் ஏப்ரல் 25 இல் ஜனாதிபதி பதவியை ஏற்க இருக்கிறார். (எ)


## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதி சத்தியசோதி (பாபு)

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்)

கனகசபாபதி சத்தியசோதி அகாலமரணம் அடைந்து விட்டார்.

இவர் விஸ்வலிங்கம் கனகசபாபதி (இளைப்பாறிய ஆசிரியர்), தவமணி (ஆசிரியை, இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் புதல்வனும், ரகுபதி (இங்கிலாந்து), பிரபாகர் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. சி. சின்னத்துரை (சி. சின்னத்துரை அன் பிறதர்ஸ், கொழும்பு, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் தாவடி மயானத்தில் ஞாயிறு 4- 3- 90 மாலை நடைபெறும்.

தகவல்:
**வி. கனகசபாபதி,**
இணுவில் தெற்கு,
இணுவில்.

(2720)

### பொன்னையா சபாரத்தினம்

புலோலி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கானை கிழக்கில் வாழ்ந்து வந்தவருமான பொன்னையா. சபாரத்தினம் (இளைப்பாறிய வசாவிளான் மகா வித்தியாலய அதிபர்), அவர்கள் 02 - 03 - 90 இல் காலமாகி விட்டார். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், வசந்தியின் (லண்டன்) அன்புத்தந்தையும், பாலேந்திராவின் (லண்டன்) அன்பு மாமனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3 - 3 - 1990 சனிக்கிழமை சங்கானையில் நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
**திருமதி ச. மனோன்மணி**
(மனைவி)
நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை,

(2716)

### திரு. சபாரத்தினம் [மயில்வாகனம்]

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சபாபதிப்பிள்ளை சபாரத்தினம் (மயில்வாகனம்) 3-3-90 அன்று காலமானார்.

இவர் விசாலாட்சியின் [செல்லம்மா] அன்புக் கணவரும், யோகீஸ்வரன் (M. L. T. கிளிநொச்சி), மகேஸ்வரன் (மருந்தாளர், மாலைதீவு), சுந்தரேஸ்வரன் [ஈசன்] (வ. பி. போ, சபை, கோண்டாவில்), நகுலேஸ்வரன் (சவூதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலாதேவி, நாகேஸ்வரி, புஸ்பராணி, இந்திரவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 4-3-90 ஞாயிற்றுக் கிழமை பகல் 12-00 மணியளவில் 21/1, 3-ம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ச. சுந்தரேஸ்வரன் [ஈசன்]**
21/1, 3-ம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[11896]]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org